# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 2




தமிழ் உயராய்வு மையம்

**பாத்திமா கல்லூரி** (தன்னாட்சி)

மதுரை - 18


Scanned with CamScanner

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

ISBN: 978-93-87865-06-8

தொகுதி - 2

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற
பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளயிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஆ. பாப்பி கமலா பாய்,** தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் **சி. அருள் மைக்கேல் செல்வி**

முனைவர் **இரா. டயானா கிறிஸ்டி**

முனைவர் **இரா. ஏஞ்சல்**

திருமதி **பா. திவ்யா**

திருமதி **டே. ஆனி மரிய ஜான்சி**

வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

Scanned with CamScanner

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 30. | செல்வன் ஜில் டேனியல் தங்கராஜ், பா. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | 111 |
| 31. | ஜீவராணி, த. | சமய நல்லிணக்கத்திற்கு இயேசுவின் பங்களிப்பு | 116 |
| 32. | செல்வி ஜுலியட் தேவகிருபை,க. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | 120 |
| 33. | திருமதி ஜெபமேரி, ம. | திருவிவிலியத்தில் ரூத் | 123 |
| 34. | செல்வி ஜெயப்பிரியங்கா, இர. | திருவிவிலிய நீதிமொழிகள் காட்டும் அறச்சிந்தனைகள் | 127 |
| 35. | திருமதி ஜெனிபர், ரா. | கிறித்தவமும் தமிழும் | 130 |
| 36. | ஜேனட் பெல்சியாள், ஞா. | விவிலியத்தில் வாழ்வியல் மதிப்பீடுகள் | 134 |


## காப்பியம்


| வ. எண் | பெயர் | தலைப்பு | |
|---|---|---|---|
| 37. | முனைவர் அலமேலு, லெ. | தேம்பாவணியில் இயற்கையும் மனிதமும் | 137 |
| 38. | முனைவர் அலிபிரிஷா, மு. | சிலுவைப்பாட்டில் மனிதம் | 140 |
| 39. | அஜிதா, நா. | தேம்பாவணியில் தாவீதன் இறைவன் மீது கொண்ட பற்று | 145 |
| 40. | திரு. கருணாகரன், கோ. | வளன் சனித்த படலம் கூறும் தாவீது அரசனின் உயர் பண்புகள் | 147 |
| 41. | திருமதி கார்த்திகாயினி, வி. | கிறித்தவக் காப்பியங்கள் காட்டும் மனிதநேயம் | 151 |
| 42. | திரு. சங்கர், இர. | இரட்சணிய மனோகரம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 155 |
| 43. | திருமதி சித்ராதேவி, த. | கிறித்தவ இலக்கியங்களும் மனித மதிப்பீடுகளும் | 159 |
| 44. | முனைவர் சுபாசினி, பெ. | தேம்பாவணி காப்பியத்தில் காணலாகும் அறச்சிந்தனைகள் | 164 |
| 45. | முனைவர் சுஜாதா, க. | அன்னையின் பெருமைகள் | 166 |
| 46. | முனைவர் சூசை ஜெஸிந்தா மெர்ஸி, ஜோ. | தேம்பாவணியில் வளனின் மாண்புகள் | 169 |
| 47. | திருமதி செல்வகனி, ரா. | திருக்காவலூர் அடைக்கல அன்னையின் மேன்மைகள் | 172 |
| 48. | முனைவர் சொர்ணமாலா, சி. | தேம்பாவணியில் வாழ்வியல் அறம் | 176 |
| 49. | முனைவர் தேவதா, ஆ. | தேம்பாவணி காட்டும் மனித மதிப்பீடுகள் | 179 |
| 50. | செல்வி பவித்ரா, மு. | தேம்பாவணியில் அறச்சிந்தனைகளும் இறைக்கொள்கையும் | 183 |
| 51. | பிரேமா கிறிஸ்டி, ஜோ. | கிறித்துவக் காப்பியம் தேம்பாவணி சுட்டும் மனிதம் | 186 |
| 52. | முனைவர் பேச்சியம்மாள், சு. | சிலுவைநாதர் திருச்சரிதம் என்னும் காப்பியத்தின் உத்திகளும் நுட்பங்களும் | 190 |
| 53. | ராஜலெட்சுமி, பெ. | சூசையின் இளமைப் பருவத்தின் மதிப்புகள் | 194 |
| 54. | ரூபி அனன்சியா, ம. | திருத்தொண்டர் காப்பியத்தில் மனித மதிப்பீடுகள் | 197 |
| 55. | முனைவர் லதா, க. | சூசையப்பர் பார்வையில் அன்னை மரியாள் | 202 |


Scanned with CamScanner

# தேம்பாவணியில் வளனின் மாண்புகள்

**முனைவர். ஜோ. சூசை ஜெஸிந்தா மெர்சி,**
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),
தமிழ் உயராய்வு மையம்.

கிறித்தவ சமயத்தைப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டு தமிழகம் வந்த கிறித்தவர்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளியோன் என்னும் ஊரில் பிறந்த பெஸ்கி என்னும் வீரமாமுனிவர். சமயப் பணி புரிய தமிழகம் வந்த வீரமாமுனிவர், மதுரையில் சுப்பிரதீபக்கவிராயரிடம் தமிழ் கற்று தமிழில் பல படைப்புகளை அளித்து தமிழ்மொழிக்கு வளம் சேர்த்தார். அவர் படைத்த காப்பியமான தேம்பாவணியில் இடம்பெறும் வளனின் மாண்புகள் குறித்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

### தேம்பாவணி

தமிழில் தோன்றிய காப்பியங்களிலேயே தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்ட பெருமையுடைய காப்பியம் தேம்பாவணி.தாவீது குலத்தில் தோன்றிய இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையைக் கதைத் தலைவராகக் கொண்டது. சிந்தாமணி, கம்பராமாயணம் போன்று காப்பியச் சுவை நிறைந்த ஒரு பெருங்காப்பியம் செய்ய முனிவர் விரும்பியதன் விளைவாக முகிழ்த்ததே 'தேம்பாவணி' என்ற தேன்தமிழ்க் காப்பியம். சூசையையும், அவரது அன்புத் துணைவியும் கடவுளின் தாயுமாகிய கன்னிமரியையும் திருக்குழந்தையாகிய இயேசுவையும் மையமாகக் கொண்டே இக்காப்பியம் அமைந்துள்ளது. இருப்பினும் சூசையின் வரலாற்றை முழுமையாகக் கூறுவது இக்காப்பியத்தின் முதன்மையான நோக்கமாக அமைகிறது.

### சூசை

தாவீது அரசரின் புகழ் பெற்ற புத்திரர், கன்னி மரியின் கற்புள்ள காவலர், திருக்குடும்பத்தின் தலைமையானவர், கன்னிகைகளின் காவலர், குடும்பங்களுக்கு ஆதரவானவர், பரிசுத்த திருச்சபையின் பாதுகாவலர், பொறுமையின் கண்ணாடி, நீதிமான், கடின உழைப்பாளி என்றெல்லாம் போற்றுதலுக்குரிய சூசை, இயேசுவாகிய குழந்தைக்கு மண்ணுலகில் வளர்ப்புத் தந்தையாகும் பேறு பெற்றவர்.

### வாக்குறுதியின் வழித்தோன்றல்

மனதில் சிந்தித்ததை உறுதியாகச் செயல்படுத்தும் இறைவன், தாவீதின் வளமான குலமரபில் மகனாய்த் தோன்ற வளம் மிகுந்த சூசையைத் தேர்ந்து கொண்டார். இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டுச் சிறந்த வரங்களைப் பெற்றவர் சூசை. தாவீதின் மரபில் வறுமையாளாய்ப் பிறந்தார். உழைப்பினால் உணவு தேடும் தன்மையுடையவராய்த் தோன்றினார். உண்மையான வீரம் அவரிடம் விளங்கியதால் விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் அவரைப் போற்றினர். இதனை,

> **"தந்த இவ் வரம் இன்னான் தன் சந்ததி முறையில் சேய் ஆய்**
> **வந்த தற்பரனால் ஆய வளப்பம்" (பா.எண். 39.வ.ச.ப)**

என்ற பாடல் அடிகளும்

> **"சாற்றிய கோத்திரத்தின் தலைமுறை வழுவாதேனும்**
> **மாற்றிய திரு ஒன்று இன்றி வறுமையான் பிறக்கச் செய்தான்" (பா.எண்.42. வ.ச.ப)**

என்ற பாடல் அடிகளும் புலப்படுத்துகின்றன.

### தேம்பாவணியாய்ப் பிறந்த மகன்

இறைவனின் அருளினால் தாவீது குலத்தில் சகோபு (யாக்கோபு) என்பவரின் மனைவி நீப்பி என்ற பெண்ணுக்குக் கருப்பம் உண்டாயிற்று. இளம்பிறை போன்று கரு வளர்ந்தது. இறைவன், ஆதாம் செய்த



Scanned with CamScanner